உங்கள் மங்கள வைபவங்களை வீடியோ படம் பிடித்துக்கொள்ளவும்
அழகிய முறையில் கலர்ப் படம் பிடித்துக் கொள்ளவும் நாடுங்கள்
Technico Cool Engineerings
K. K. S. Road, Kokuvil

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 112 திங்கள் 28-05-1990 (வைகாசி 14) துல்ஹஃஜ்தா 03

தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ டெக், குளிரூட்டிகள் மற்றும் சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளையும் பழுதுபார்க்க
சிறந்த ஸ்தாபனம்
Technico Cool Engineerings

# 6வது திருத்த பிரேரணையை அரசு கொண்டுவரின் ஈரோஸ் வாபஸ்

## எதிர்கட்சிகளுக்கு நாளை ஈரோஸ் பிரேரணை குறித்து விளக்கமளிக்கும்

**ஆறாவது திருத்தச்சட்டத்தை நீக்கும் பிரேரணையை அரசாங்கம் தானாகவே கொண்டுவரும் பட்சத்தில் ஈரோஸ் அது தொடர்பான பிரேரணையை வாபஸ் பெறும்.இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. இ.இரத்தினராசா தெரிவித்தார்.**

ஈழவர் முன்னணியின் பிரேரணை தனிப்பட்ட அங்கத்தவர் பிரேரணையாகவே கொண்டு வரப்படும் எனத் தெரிவித்தார்.

அரசாங்கக் கட்சியினர் தாமாகவே பிரேரணையைக் கொண்டுவரும் பட்சத்தில்

—08 ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்கள் பிரச்சனையை தனியே ஐ.தே.க. தீர்க்கமுடியாது

வடக்கு கிழக்குப்பிரச்சனை தனியே ஐக்கியதேசியக்கட்சியினால் தீர்த்து வைக்க முடியாது. இதற்கு ஏனைய எதிர் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று மாலையில் நடைபெற்ற ஓர் மாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தமிழர் பிரச்சனையை தீர்க்க அரசாங்கம் எவருடனும் ஒத்துழைக்க தயாராகவுள்ளதாகவும் ஜனாதிபதி அப்போது குறிப்பிட்டார்.

## 6-வது திருத்தச் சட்டம் நீக்க ஈ. பி. ஆர். எல். எப். ஆதரவு

ஆறாவது திருத்தச்சட்டம் தொடர்பாக பிரேரணை பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படும் பட்சத்தில் அதற்கு ஆதரவு அளிக்க தயாராக இருப்பதாக ஈ.பி. ஆர். எல். எப். எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர் என்று ஈரோஸ எம்.பி இரத்தினராசா தெரிவித்துள்ளார்.

ஆறாவது திருத்தத்தை நீக்குவது சம்பந்தமான தனிநபர் பிரேரணை கொண்டு வருவது குறித்து ஈழவர் ஜனநாயக முன்னணி இது

— 08ஆம் பக்கம் பார்க்க

## ஹரியானா முன்னால் முதல்வர் தேர்தலில் மீண்டும் தெரிவு

ஹரியானாவில் நடைபெற்ற இடைத்தேர்தலில் முன்னால் முதலமைச்சரும் ஜனதாதள் தலைவர் ஓம் பிரகாஷ்செளத்தாலா வெற்றிபெற்றுள்ளார்

செளத்தாலாவை எதிர்த்து போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் உட்பட அனைத்து கட்சி உறுப்பினரும் தமது கட்டுப்பணத்தை இழந்தனர்.

கடந்த பொதுத்தேர்தலில் ஓம் பிரகாஷ் செளத்தாலா குளறுபடிகள் செய்தே வெற்றியடைந்தார் என்ற செய்திகளை தொடர்ந்து இவர் கடந்த மாதம் தமது முதலமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமா செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

## கூட்டுறவுக் கடைகளுக்கு தனியார் கடைகள் முன்மாதிரி

(கல்வியங்காடு)

திங்கள் முதலே மாவின் விலை அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தும் அதற்கு முன்னர் சனிக்கிழமையே நல்லூர் பல நோக்குக் கூட்டுறவு சங்கக் கிளைகளில் அதிகரிக்கப்பட்ட விலையான ரூபா 14.25 க்கு மா விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதே சமயம் உடனடியாகக் குறைக்கப்பட்ட சீனியும் அரி

—08ஆம் பக்கம் பாக்கக

## சுமுகமான பதில் ஒன்றுடன் ஹமீத் இன்று யாழ். வருகிறார்

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் முகமாக நீதியமைச்சர் ஜனாப் ஏ.சி.எஸ். ஹமீத் இன்று காலை யாழ் நகர் வருகிறார்.

கடந்த வாரம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விபரங்களை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த அமைச்சர்ஹமீத் அவற்றிற்கான ஜனாதிபதியின் பதிலுடன் இன்று இங்கு

— 08 ஆம் பக்கம் பார்க்க



நேற்று நடைபெற்ற விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரின் முதலாவது யாப்பு மாநாட்டின் போது மேடையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களான பானு, டொமினிக், யோகி, பாலசிங்கம், மாத்தயா, சுந்தரி, கீதா, ஜெயா, ஜெயந்தி, திருமதி பாலசிங்கம் ஆகியோரை காணலாம்.

## ஞாயிறன்று கடைகள் மூடுவதெனத் தீர்மானம்

வட்டுக்கோட்டைப்பகுதியிலுள்ள சகல கடைகளையும், வர்த்தக ஸ்தாபனங்களையும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுவதுஎன்று வட்டுக்கோட்டைவர்த்தகர்சங்கம் தீர்மானித்துள்ளது.

—08 ஆம் பக்கம் பார்க்க

## வெளிச்சம் கொண்டுசெல்ல மீனவருக்கு அறிவுறுத்தல்

(தாளையடி)

கடந்த காலங்களில் இரவு வேளைகளில் வெளிச்சம் எதுவுமில்லாமல் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த பல படகுகள் கடற்படை ரோந்துக்கப்பல், படகுகளினால் மோதப்பட்டு படகுகள் சேதமாக்கப்பட்டதுடன் பலர் உயிரிழந்துமுள்ளனர்.

இதனைக் கவனத்திற்

—08 ஆம் பக்கம் பார்க்க

## ஆண்டு நான்கிற்கு கீழ் இரட்டிப்பு வகுப்பேற்றத் தடை

ஆண்டு ஒன்றிற்கும் ஆண்டு நான்கிற்கும் இடையில் கல்வி கற்கும் மாணவர்களை இரட்டிப்பான (Double Promotion) வகுப்பேற்றம் செய்யக் கூடாது என்று கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது. இதற்கான சுற்று நிருபங்கள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது, இக்காலப்பகுதியில் இரட்டிப்பான வகுப்பேற்றம் நடைபெறுவதினால்

— 8 ஆம் பக்கம் பார்க்க

# முன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை கப்டன் 'அலன்'

(ந. பாக்கியலிங்கம்)

தாயின் மடியில்
06-05-1962

தாயக மண்ணில்
26-05-1987

தமிழ் மண்ணுக்கு வல்வை தந்த
தியாக வேங்கை
கப்டன் அலன்

நடனசிகாமணி பாக்கியலிங்கம்
அவர்களுக்கு
எமது அஞ்சலிகள்.

அலன்! நின் பாதைதான் தமிழீழ
மக்களுக்கு இருக்கும் பாதை!

நாமும் புறப்படுவோம்!

உன் அன்பர்கள்

வ. இ. நடனசிகாமணி – இரத்தினேஸ்வரி
குடும்பத்தினரும், சகோதரர்கள்,
நண்பர்களும்.

அம்மன் கோவிலடி
வல்வெட்டித்துறை

05177

# சுண்டுக்குளி, நாவற்குழி கல்லூரிகளுக்கு சபாஷ்

இன்றைய பாடசாலை மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டுமே உள்ளனர் என்ற வாதம் பலரால் பல காலமாக முன் வைக்கப் பட்டுள்ளது.

இருந்தும் எவரும் அது குறித்து எதுவித நடவடிக்கையும் ஆக்கபூர்வமாக எடுக்க வில்லை.

புதிய யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தற்போது பல முயற்சி களை எடுத்து வருவதாத் தெரிகிறது.

கலை நிகழ்ச்சிகளுக்கு பாடசாலைகளில் நேரம் ஒதுக்க வேண்டும் என்றும், மாலை நேரங்களில் உடற்பயிற்சிகளில் ஈடுபட வேண் டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் ஓர் பாராட்டுவிழா நடைபெற்றது.

பாஷையூர் கவிஞன் தேவதாஸனின் வித் துக்கள், நூல் வெளியீட்டுவிழா நடைபெற்றது.

தென்மோடி கூத்து நாடக நூலான இதி லிருந்து சில காட்சிகளும் அங்கே கொழும்புத் துறை சவேரியார் குருமட மாணவர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

இந்த விழா சுண்டுக்குளி உயர்தர மாணவி கள் ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந் தது.

## இதயநாதம்

திக்கட்கிழமை 28—05—1990

நலவாக்கு

ஆசை பேராசையாகவும், அன்பு வெறியாக வும் மாறும்போது அமைதி அங்கு நிற்கா மல் சென்றுவிடும்.

—மார்க்ஸிம் கோர்க்கி

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

இந் நிகழ்ச்சியானது மாணவிகளுக்கு ஒதுக் கப்பட்ட கலை கலாசார பாட நேரத்திலேயே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இதே போன்றதொரு நன்முன்மாதிரி விடயம் நாவற்குழி மகாவித்தியாலயத்திலும் நடைபெறுகிறது.

'பெனின்சுலா' நிறுவனம் அன்பளிப்புச் செய்த ஒலிபெருககி சாதனங்கள் மூலம் இக் கல்லூரியில் செய்தித்தாள் கண்ணோட்டம் இடம்பெறுகிறது.

ஒலிபெருக்கி மூலம் காலையில் தினமும் பத்திரிகையில் வரும் பயனுள்ள செய்திகள் வாசித்துக் காட்டப்படுகின்றன.

பொது அறிவு வளர்ச்சிக்கும், பத்திரிகை வாசிப்பில் ஈடுபாட்டை உண்டாக்கவுமே இந் நடைமுறை என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை மாணவர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

எமது கலை கலாசாரம் என்பன பாதுகாக் கப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கப் படுகிறது.

கலை கலாசாரமென்பன மாணவர்கள் மத்தியிலிருந்தே ஊட்டப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை நாம் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

பாடசாலை மட்டங்களில், எமது பாரம்பரிய கலை கலாசார வடிவங்களைப் புகுத்துவதில் அதிபர்கள் முன்னிற்க வேண்டும்.

இன்றைய மாணவர்கள் புத்தகப்பூச்சிகளாக, வெறும் ஏட்டுச்சுரக்காயாக இருக்கின்றனர்.

உலக விடயங்களிலுல், பொது அறிவிலும் அவர்களது அறிவை முன்னேற்ற வேண்டு மாயின் அவர்களுக்கான வாசினை அறிவை வளர்க்க வேண்டும்.

இதற்கான களமாக பள்ளிக்கூட நூல் நிலையம் பயன்படுத்தப்பட வேண்டும்

பத்திரிகைச் செய்திகள் தொடர்பான பொது அறிவுப் போட்டிகளும் நடத்தப்பட வேண்டும்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும், நாவற்குழி மகாவித்தியாலயமும் சகல பாடசாலைகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கட்டும்.

# வைத்தியசாலை மலகூடத்தில் புழுக்கள்

# நோயாளிகளின் வாட்டுகளில் நாய்கள்

நோயாளருக்கு உணவுவழங் கும் சமையலறை எப்படி இருக்கிறது என்று சமையல் அறைக்குள் நுழைந்து பார்த் தோம் ... ஒரு ஊழியர் ... ''இஞ்ச உங்களுக்கு என்ன வேலை... குசினியைஏன் பார்க் கிறீங்கள் என்று கோபத் தோடு கேட்கலானார்.

அவரது கதைக்கு காதைக் கொடுக்காமல் சமையல றையை நோட்டம் விட் டோம்...சமையல் பாத்திரங் கள் மிகவும் பழையவை. பாத்திரங்கள் ஒழுங்காக சுத்தி கரிக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

பாவனைக்கு உதவாதவை என்று ஒதுக்க வேண்டிய சில பாத்திரங்கள் அங்கு காணப் படுகின்றன, சமையலறைக் குள் இருக்கின்ற தொட்டி ஒன்று மிக மிக அழுக்கான நிலையிலேயே காணப்படுகின் றது. இலையான்களுக்கு அங்கு பஞ்சமில்லை.

சில நாட்களில் நோயா ளர்களை எந்த நேரமும் பார்க்கக் கூடிய வசதி கிளி நொச்சி மாவட்ட வைத்திய சாலையில் கிடைக்கிறது. இச் சந்தர்ப்பத்தில் யாரும் வைத் திய சாலைக்குள் நுழைந்து திரும்பி வரலாம்.

சில நாட்களில் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் தான் நோயாளர்களை பார்வையிட லாம். வாயிற் காவலாளியின் அணைவிருந்தால் அவ்வேளை களில் கூட தடைகளைத் தாண்டி உள்ளே சென்று வரலாம்.

வாயிற் காவலாளியின்

## நேரடி ரிப்போட்

அணைவு இல்லா விட்டால் குறிப்பிட்ட நேரம் வரை நின்றே நோயாளரைப் பார் வையிட வேண்டும்.

காவலாளி வாயிற் கடமை யில் இருக்கின்ற நாட்களில் கட்டுப்பாடுகள் உண்டு. கட மையில் இல்லாத வேளை களில் யாரும் போய்வரலாம்.

வாட்டுகளுக்குள் நுழைந் தால் முதலில் எம்மை வர வேற்பது நாய்கள் தான். அங்கு நாய்கள் தாராளமாக நடமாடுகின்றன. ஒவ்வொரு வாட்டிற்கும் ஒரு நாய் என்று கணக்கிட்டுப் பார்த்தாலும் நாயின் தொகை கூடுதலா கவே இருக்கும்.

சில நேரங்களில் வாட்டுக் களின் சுற்றுப்பகுதி, உட் பகுதி சுத்தமாகக் காணப்படு கின்றது. சில நேரங்களில் பஞ்சுகள் உட்பட அழுக்கு களால் நிறைந்து காட்சி தரு கின்றது.

ஐந்தாம் வாட்டிற்குள் உள்ள மல சல கூடத்திற்கு நுழைந்து பார்த்த போது, மல சல கூடம் சுத்திகரித்து மாதக்கணக்காகி விட்டதோ என்ற உணர்வே ஏற்படுகின் றது.

ஒரு மல சல கூடத்திற்குள் புழுக்கள் நெளிவதை எம் கண்களால் காண முடிந்தது.

மல சல கூடங்கள் இந்த நிலையில் காணப்பட்டால்... நோய்களை வைத்தியசாலை களே ஏற்படுத்திக் கொடுக் கின்ற இடமாக மாறிவிடும் என்பதில் ஐயமில்லை.

ஐந்தாம் வாட்டில் இருக் கும் நோயாளர் ஒருவரிடம் மலசல கூடம் சுத்தமாக இருக்கிறதா என்று கேட்ட போது... மல சல கூடத்திற் குள்ள போய் வந்தா சாப் பிட்ட சாப்பாடே வெளியில வருது...அந்த அளவுக்கு துப் பரவில்லை இத நாங்கள் யாரட்ட சொல்லுறது

இன்னொரு நோயாளர் குறுக்கிடு என்ன கஷ்டப்பட் டாலும் பறவாயில்ல நோய் மாறிட்டுதுஎண்டாப் போதும் எவ்வளவு கெதியில் நோய் மாறுதோ அவ்வளவு கெதி யில் வீட்ட போய்விட வேணும் என்றார்.

வெளி நோயாளர் பிரிவில் நோயாளர்களுக்கு மருந்து வழங்குவதற்கு என நியமிக் கப்பட்டவர்களே (பாம ஸிஸ்ட்) மருந்துகளைக் கொடு க்க வேண்டும். சில வேளை களில் சிற்றூழியர்களும் மருந்து கொடுக்கின்ற சம்ப வங்கள் நிகழ்கின்றன.

கடந்த காலங்களில் மருந் துகளை மாறிக்கொடுத்த சம்பவங்களும் இடம்பெற்றுள் ளமையை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.எமது அலு வலகத்திற்கு வந்த கடிதங் களிலும் சுட்டிக் காட்டப்பட் டுள்ளது.

வைத்தியசாலையில் மருந்து கள் ஒழுங்காகக் கொடுக்கப் படுகின்றனவா என மணி என்ற நோயாளர் ஒருவரிடம் கேட்டதற்கு மாவட்ட வைத் தியசாலையில் மருந்து இல்லா விட்டாலும் அதனைச் சுற்றி யுள்ள தனியார் வைத்திய சாலைகளில்மருந்துகள் தாரா ளமாக கிடைக்கின்றன என்று சொன்னார் ... இதன் மர்மம் என்னவோ...நாம் அறியோம்.

இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் மதுபோதையில் கடமை நேரத்தில் நடமாடு கின்றார்கள் என எமக்கு வந்த கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. இது பற்றி நாம் சிலரை விசாரித்து உண் மையா? எனக் கேட்டோம்.

அவர்கள்,ஊழியர்கள் சிலர் மதுபோதையில் நடமாடுகின் றார்கள் என்று எம்மிடம்

**உதரன்**

தெரிவித்தனர். இச்செய்தி உண்மைதான் என்றனர். ஆனால் எம்மால் நேரடியாக மதுபோதையில் உள்ள ஒரு வரைக் கண்டுபிடிக்க முடிய வில்லை. நாம் சென்ற நாட் களில் மது அருந்தாமல் இருந் திருக்கலாம்......

வைத்தியசாலைக்குச் சொந் தமான சில பொருட்கள் சில ரது வீடுகளில் சொந்தப் பாவனைக்காகப் பயன்படுத் தப்படுகின்றதாம்.

நோயாளர்களுக்கு உணவு சமைப்பதற்கு என வருகின்ற பொருட்களை சிலர் தமது வீடுகளுக்கு சாதுரியமாக எடுத்துச் செல்கின்றனராம்.

பிள்ளைகளுக்குக் கொடுக் கப்படுகின்ற திறிபோஷா மாவை சில ஊழியர்களிட மிருந்து பெறக்கூடிய பாக்கி யம்கூட கிடைக்கிறதாம்.

இவைபற்றி மாவட்ட அதி காரிக்கு எதுவும் தெரியாதோ என்று நாம் அங்கு சிலரிடம் விசாரித்துப் பார்த்தபோது ..

இவரால் நிர்வாகத்தை நடத்த முடியாது. இங்கு வேலை செய்பவர்கள் இவரு டைய உத்தரவுகளை உதா சீனம் செய்து வருவதோடு இவரையும் மதிக்கத் தவறி விடுகின்றனர் என்ற கருத்தை வெளியிட்டனர்.

உருக்கமான வேண்டுகோளிற்கிணங்க புகைப்படம் பிரசுரமாகவில்லை.

நாம் கிளிநொச்சி வைத்திய சாலைக்குள் இருந்து நிலை மைகளை அவதானித்துக் கொண்டிருந்தபோது, ஆய்வு கூடத்திற்குள் பலரது சிரிப் பொலி கேட்டிக் கொண்டிருந் தது. அன்று சிறு பிள்ளை களைப் பார்க்கும் நாள் என் பதால் பல பெற்றோர் தங் கள் பிள்ளைகளுடன் வரிசை யில் நின்றுகொண்டிருந்த னர்.

குழந்தைகள் வீரிட்டு அல றிக் கொண்டிருந்தன ..ஆய்வு கூடத்திற்குள் சிரிப்பொலி எழுந்து கொண்டிருந்தது.

மெல்ல ஆய்வு கூடத்திற் குள் எட்டிப்பார்த்தோம் பல் கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பப்பட்ட மாணவர் கள். அங்கே காணப்பட்டனர் புதிதாக ஒவ்வொரு மாவட் திற்டத்திலும் பல்கலைக்கழ கத்தெரிவுசெய்யப்பட்டமாண வர்களுக்கு அவ்வப் பிராந்தி யத்திலே. பல்கலைக்கழகத் திற்குள் நுழைவதற்கு முன் ஒவ்வொரு அலுவல்களிலும் பயிற்சிகள் வழங்கப்படுகின் றன.

இவர்கள் தற்போது கிளி நொச்சி மாவட்ட வைத்திய சாலையில் பயிற்சியை மேற் கொண்டுள்ளார்கள்.

இவர்கள் வைத்தியசாலை ஆய்வு கூடத்திற்குள்சிரித்துக் கும்மாளம் அடித்துக் கொண் டிருந்ததோடு அங்கசேட்டை களையும் மேற்கொண்டபடி இருந்தனர். இக்காட்சியை நாம் எமது கமறாவுக்குள் கச் சிதமாக சிக்க வைத்துக் கொண்டோம்.

நோயாளர் வெளியில் பரி சோதனை முடிவுக்காகக் காத்திருக்க... பல்கலைக்கழக மாணவர்கள் கும்மாளம் அடித்துக் கொண்டிருக்கும் காட்சியையும் இதயமுள்ள எவராலும் சகித்துக்கொள்ள முடியாது.

பல்கலைக்கழக மாணவர் தான் நாட்டின் எதிர் காலச் சிற்பிகள் ... பல்கலைக்கழகத் திற்குப்போக முன்னே இவர் கள் இப்படி தங்களைமறந்த நிலையில் நடந்து கொள்ளும் போது மற்றவர்களைக் குறை சொல்வதில் என்ன பயன் ..?

நாம் புகைப்படம் எடுத்த தைக் கண்ட பல்கலைக்கழக மாணவர்கள் எம்மை சுற்றி வளைத்துக்கொண்டு ஏன் படம் எடுத்தீர்கள்? எதற்கா கப் படம் எடுத்தீர்கள்? உங் களுடைய பெயர் என்ன? இப்படத்தை என்ன செய்யப் போகின்றீர்கள் என்று மிரட் டத் தொடங்கி விட்டனர்.

இம்மிரட்டலுக்குத் தலமை தாங்கியவர்கள் பெண்மணி களே... ஆண்கள் பின்னே நிற்க முன்னே பெண்கள் சுற்றிவளைத்து எம்மை வெளியே செல்லவிடாது தடுக்க முயற்சிகளை மேற் கொண்டனர். ஆனால் அவர் களது முயற்சி பலன் அளிக்க வில்லை.

நாம் எத்தனையோ இடங் களுக்கு நேரடி றிப்போட்டுக ளுக்காகச் சென்றிருக்கின் றோம் பல ஆபத்துக்களை சந்தித்திருக்கின்றோம் இது வும் எமக்கு ஒருவகை அனு பவம்தான்.

பல்கலைக்கழக மாணவர் களின் கும்மாளப்படங்களைப்

— 6 ஆம் பக்கம் பார்க்க

# செய்தி மஞ்சரி

## கூட்டுறவு வங்கி

வடக்குக் கிழக்குக்கென ஓர் மாவட்ட கூட்டுறவு வங்கி விரைவில் நிறுவப்படவுள்ளது.

அதிகாரப் பரவலாக்கலின் கீழ் மேற்படி வங்கி 1991ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறுவப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கௌரவம் கிடைக்கும்

கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்டிருந்த தமிழ் எழுத்தாளர்கள, கவிஞர்கள், விமர்சகர்கள் அனைவரும் எதிர்வரும் சாகித்திய விழாவில் கௌரவிக்கப்படுவார்கள்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் பல்வேறு பெயர்களை ஊக்குவிக்குமுகமாக நடைபெறவுள்ள சாகித்திய விழாவின் போது கௌரவிக்கப்படுவார்கள்.

## மீன் உற்பத்தி பெருக்க...

மீன் உற்பத்தியை அதிகரிக்க ஐந்தாண்டு காலத்திட்டம் ஒன்றை மீன்பிடித்துறை அமைச்சு தயாரித்துள்ளது.

இத் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு அபிவிருத்தி உதவிகள் வழங்கப்படவிருக்கின்றன.

மீன்பிடிக் கூட்டுறவு சங்கங்களில், மீனவர் ஒரு முகப்படுத்தப்படுகின்றனர்.

உறுப்பினர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கென பொருளாதாரநடவடிக்கை ஒழுங்குபடுத்தும் வகையில் இக் கூட்டுறவுச் சங்கங்கள் பலப்படுத்தப்படவுள்ளன.

## தரம் கூட்ட நடவடிக்கை

முறைசாராக் கல்விப் பிரிவுகளில் பயிலும் மாணவர்களின் அடைவுகளை காலத்திற்குக் காலம் மதிப்பீடுசெய்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளின் தரத்தை உயர்த்துவதற்கு முறைசாராக் கல்விப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் பிரகாரம் 1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள பயிற்சிகளில் பயிற்றுவோருக்கு தொடர் மதிப்பீட்டுத் திட்டம் அமுல்செய்யப்படும். இப் பயிற்சிகளில் பயில்வோர் 80 வீத வரவு காட்டாதிருப்பின், அவர் மீது நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக, கல்வி அதிகாரி; (தொழில் நுட்டம்) திரு த. சுப்பிரமணியம் தெவித்தார். (4)

## துரிதகதியில் செயற்பாடு

(முள்ளியான்)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு மின்சாரம் வழங்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலைகள் சில மாதங்களாகத் தொடரப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடமராட்சி கிழக்கில் உள்ள பொதுஸ்தாபனங்கள் இவ்விடயம் தொடர்பாக உயர் அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டியதைச் தொடர்ந்து இவ்வேலைகள், துரிதகதியில் நடைபெற்றுவருகின்றன.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் எந்த ஒரு பகுதியிலும் மின்சாரம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது, (43)

## தரமுயர்த்தக் கோரிக்கை

(முள்ளியான்)

மருதங்கேணி கிராம வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்தப்படவேண்டும்.

இவ்வாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பொது ஸ்தாபனங்கள் சுகாதார அமைச்சிற்கும் யாழ். மாவட்ட பிராந்திய சேவைப் பணிப்பாளருக்கும் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளது

இவ் அரசாங்க அதிபர் பிரிவில் பிரதான வைத்தியசாலையாக இக்கிராம வைத்தியசாலையே இயங்கிவருகின்றது ஆனால், இவ் வைத்தியசாலை தரமுயர்த்தப்படாமல் பல குறைபாடுகளுடன் இயங்கிவருவதையிட்டு மக்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளாகிவருகின்றனர்.

ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவிலும் ஒரு மாவட்ட வைத்தியசாலை அமைய வேண்டும் என்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஏற்ப ஏனைய அரசாங்க பிரிவுகளில் உள்ள வைத்தியசாலைகள் மாவட்ட வைத்தியசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன. ஆனால் மருதங்கேணி கிராம வைத்தியசாலை தரமுயர்த்தப்படாமலிருப்பது கவலைக்குரிய விடயமாகும்

மேலும் வடமராட்சி கிழக்கிற்கு புதிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மற்றும் மின் விநியோகம் ஆகியன ஏற்படுத்தப்பட்டுள்ளன

ஆனால் சுகாதார வசதிகள் குறைந்த ரீதியில் இருப்பது இப்பகுதி மக்களுக்குப் பெரும் குறையாக உள்ளது

## மந்துவிலில் சிரமதானம்

(நாவற்குழி)

மக்களின் பங்களிப்புடன் மந்துவில் விநாயகர் வீதியின் திருத்த வேலைகள் மந்துவில் சூரியகுமாரன் சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டது.

அரசு ஒதுக்கிய பணத்துடன் மக்கள் ஒருங்கிணைந்து கல் மக்கி, என்பன பரவி இவ் வீதியை சிரமதானப் பணியாகவே முடித்துள்ளார்கள். (ப. 5)

### நாவற்குழியில் சுகாதார அதிகாரி உரை:

# ஊட்டச் சத்துள்ள உணவே உடல்நலம் பேண உதவும்

(நாவற்குழி)

''மனிதன் சுகமாக வாழ்வதற்கு சுகாதாரக் கல்வியும் மிக அத்தியாவசியமாகின்றது. சுகாதாரப் பழக்க வழக்கங்களை நிரந்தரமாக கைக்கொண்டால் வாழ்க்கை சிறப்பானதாக அமையும்''

இவ்வாறு சுகாதாரப் போதனாசிரியர் திரு. ஜெகநாதன் நாவற்குழி மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் சுகவாழ்வு பற்றி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. த. முத்துக்குமார சாமியின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. ஜெகநாதன் தொடர்ந்து பேசுகையில் சுகாதார கட்டுப்பாட்டைப் பேணிவாழ்பவனுக்கு செயற்கைஅழகு ஒரு அழகல்ல இயற்கையானஅழகேஅவனை மெருகூட்டுவதாக அமையும்.

இன்று நாம் கூடுதலாக உட்கொள்ளும் வெள்ளைச் சீனி எமக்கெல்லாம் ஒரு வெள்ளை நஞ்சு. இந்த வெள்ளைச் சீனியை உட்கொள்ளுவதால் எமக்கு ஈரல் வியாதி இருதய வியாதி, சிறுநீரக வியாதி, பல்வியாதி போன்ற பல வியாதிகள் வர இடமுண்டு. ஆகையால் சீனியிலிருந்து செய்யப்படுகின்ற ரொபி, மிட்டாய், ஐஸ்கிறீம் போன்ற பொருள்களை உண்பதைக் குறைத்து உடம்பிற்கு வலுவூட்டக் கூடியதான பழவகைகளில் கூடுதலாக உண்ண வேண்டும்.

ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு பதினெட்டு கிறாம் இரும்புச் சத்து தேவைப்படுகிறது. இவற்றைக் கீரைவகைகளிலிருந்தே நாம் பெற்றுக் கொள்ளலாம். பாரத மாதாவின் புதல்வனான காந்தி மகான் பச்சை நிற இலை வகையைக் கூடுதலாக உண்டபடியால்தான் பிணியின்றி மனவுறுதியுடன் இருந்து பாரதத்தைக் காக்க முடிந்தது.

ஆகையால் மாணவர்களாகிய நீங்களும் கூடியளவு பச்சை நிறமுள்ள இலை குழை, கீரைவகைகள் போன்றவற்றை நன்றாக உட்கொள்ள வேண்டும்.

மனிதனுக்கு நித்திரை குறையும் போதும் நரம்புடன் சம்பந்தப்பட்ட பல நோய்கள் ஏற்படுகின்றன. நித்திரையைக் குறைக்காமல் நித்திரை கொள்ளும் ஒரு மனிதன் சுகதேகியாகவும், புத்திசாலியாகவும் வாழலாம்.

இவ்வாறாக உணவுகளில் இருக்கும் ஊட்டச் சத்துக்களைப்பற்றி யோசிக்க விரும்பாதவன் பயனற்றவன். யோசிக்க இயலாதவன் சோம்பேறி மாத்திரமல்ல முட்டாளும்கூட! என்றார். (ப.5)

## இன்று நாள் எப்படி?

மேடம்: தொழில் பலிதம், பெண்களால் உதவி, வணிகர்கள் இலாபம், தூரதேச பிரயாணம், தேடியவர் வருகை.

இடபம்: வாக்குப் பலிதம், உயர்பதவி, உத்தமர் உறவு, வாகன சுகம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் இலாபம்.

மிதுனம்: பெண்களால் பகை, பொருள் செலவு, வாகன மாற்றம், தூரத்துச் செய்தியால் நன்மை.

கடகம்: திருடர் பயம், தேடியவர் வருகை, வாகன நஷ்டம், புதுத் தொழில், வணிகர்கள் நன்மை.

சிங்கம்: புகழ் தேடி வரும், வாக்கு பலிதம், உயர் பதவி, உத்தமர் உறவு, புத்திர சுகம், புதுத் தொழில்.

கன்னி: கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்தவர் ஒன்று சேருவர், தெய்வ வழிபாடு, திடீர்ப் பணம்.

துலாம்: வாக்கு சாதுரியம், புத்திர மகிழ்ச்சி, மனைச் சிறப்பு, விவாக நிச்சயம், வணிகர்கள் இலாபம்.

விருச்சிகம்: உத்தமர் வருகை, இராஜ் மரியாதை, உயர் பதவி, இரு வருமானம், வாகன சுகம்.

தனுசு: எண்ணியது நடக்கும், விவாகப் பேறு, பொருள்ப் பேறு, புத்திர வழி சுகம், புதுமனைச் சிறப்பு.

மகரம்: தேடியவர் வருகை, வாகன இலாபம், திடீர்ப் பிரயாணம், புதுத்தொழில்.

கும்பம்: பிதாவழிப் பொருள், விவாக நிச்சயம், பணவரவு, சுகஜீவியம், இளைய சகோதர வழி உதவி.

மீனம்: சுக ஜீவியம், வாக்குப் பலிதம், வணிகர்கள் இலாபம், எண்ணியது நடக்கும், தேடியவர் வருகை, திடீர்ப் பிரயாணம்.

யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

## நம்மவருடன் கலைஞர் கருணாநிதிக்கும் பரிசு

தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதிக்குக் கொழும்புத் தமிழ் சங்கம் ரூபா 1000 பரிசளித்துள்ளது. சங்கத்தின் புரவலராக இருந்த பொ. சங்கரப்பிள்ளை நினைவுப் பரிசில் கலைஞர் கருணாநிதி எழுதிய ''பண்டாரவன்னியன்'' எனும் நூலுக்கு வழங்கப்பட்டுள்ளது. சிவங்கருணாலய பாண்டியனார் நினைவுப் பரிசில் பண்டிதர் மு.கந்தையா எழுதிய ''திருக்கேதீச்சர மான்மியத்துக்கும்'' சங்க முதல் தலைவர் ஆ. சபாரத்தினம் நினைவுப்பரிசில் பல்கலைப்புலவர் க.சி.குலரத்தினம் அவர்கள் எழுதிய ''செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்'' என்ற நூலுக்கும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை நினைவுப் பரிசில் டாக்டர் ஏ. கே. செருகுதீன் எழுதிய 'முத்துநகை' எனும் நூலுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூலுக்கும் ரூபா 1000 வழங்கப்படும். பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பரிசில் மகாகவி பாரதியார் பற்றிய இலக்கியக் கட்டுரைக்காக கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டுள்ளது. நாகேஸ்வரன் ''மகாகவி பாரதியார் இலக்கியங்களும், தமிழ் மொழி உணர்வுகளும்'' எனும் ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்திருந்தார். இதற்கு ரூபா 500 சன்மானம் கிடைக்கும்.

### வரணி வடக்கு

## 'காத்தவராயன்' இசை நாடகத்திற்கு முதலிடம்

வரணி கொத்தணிப் பாடசாலைகளின் தமிழ்த் தினத் திறந்த வெளி நாடகப் போட்டியில் வரணி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைச் சிறுவர்களின் 'காத்தவராயன் இசை நாடகம் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

அனைவரினதும் பாராட்டைப் பெற்றுக் கொண்ட இந் நாடகத்தைப் பாடசாலை அதிபர் திரு. வ. கந்தசாமி தயாரித்து மேடையேற்றினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தென் மராட்சிப் பொறுப்பாளர் திரு. பாப்பாவும் இந் நாடகத்தைப் பாராட்டியுள்ளார். (36)

### வட, கிழக்கு தமிழ்த்தினப் போட்டி

## ஜூன் 2-ம் 3-ம் திகதிகளில் திருமலையில் நிகழ ஏற்பாடு

(வண்ணார்பண்ணை)

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் தமித் தினப் போட்டிகள் அடுத்த மாதம் இரண்டாம் மூன்றாம் திகதிகளில் திருகோணமலை சென். ஜோசப் கல்லூரியில் நடைபெறும்.

இப்போட்டிகளில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்விமாவட்டமட்டத்தில் ஏற்க்கனவே நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பெற்றோர் பங்கு கொள்ளவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ. ஆர். ஏ. அஸீஸ் மேற்கொண்டுவருகிறார். யாழ் மாவட்டத்திலிருந்து பெருந்தொகையான மாணவர்கள் இப் போட்டிகளில் கலந்து கொள்ளும் பொருட்டுத் திருகோணமலை செல்லவுள்ளனர்.

தேக ஆரோக்கியம் பெற்றவரே

# இன்னல்களை துணிச்சலுடன் எதிர்கொள்ள இயலும்

-தினேஷ்

'தேக ஆரோக்கியமுள்ள சுகதேகியினால்தான் பல வழிகளிலும் ஏற்படும் இன்னல்களுக்கு' மத்தியில் நிமிர்ந்து நிற்க முடியும். ஒழுங்காக சுகாதார விதிகளை பேணாதவர் நிரந்தர நோயாளியாகக கூடிய நிலை ஏற்படலாம்.

மக்கள் மத்தியில் சுகாதாரத்தை எவ்வகையில் பேண வேண்டும் என்பதை அறிவுறுத்துவதுடன் ஆபத்து வேளையில் உதவக் கூடிய வகையில் முதலுதவி செய்யக்கூடிய பயிற்சிகள் வழங்கவே இந்நிலையம் இப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. விரைவில் கிராமிய மட்டத்தில் பிரிவு நிலையங்கள் ஏற்படுத்தி மக்களின் சுகாதார வசதிகள் பேண வசதிகள் செய்யப்படும்.

இவ்வாறு சாவகச்சேரி கண்டி வீதியில் விடுதலைப் புலிகளின் தென்மராட்சி சுகாதாரப் பிரிவு நிலையத் திறப்பு விழாவில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி சாவகச்சேரி பொறுப்பாளர் தினேஷ் உரையாற்றுகையில் கூறினார்.

தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளர் கா. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் ஆத்மஜோதி நா. முத்தையா, சாவகச்சேரி கொத்தணி அதிபர் நா. குகதாசன், டாக்டர் ரஞ்சன், சுகாதாரப்பகுதி பொறுப்பாளர் சேகர் உட்பட பலர் உரையாற்றினர்.

சுகாதாரப் பிரிவு நிலையத்தை வீரமரணமடைந்த கல்வயல் வேங்கை கண்ணனின் தாயார் திருமதி நமசிவாயம் திறந்து வைத்தார்.

(ப 3)

## நம்மைச் சுற்றி நடப்பவை

பம்பலப்பிட்டி சென், பீற்றர்ஸ் கல்லூரி மைதானத்தில் சிலதினங்களுக்குமுன்னர்கொழும்புசைவமங்கையர் வித்தியாலய மாணவிகளின் மெய்வல்லுநர் போட்டிகள் இடம்பெற்றன.

மூவினத்தையும் சேர்ந்த பெருந்தொகையானோர். தமிழ் மாணவிகளின் திறமைகளை ஆர்வத்துடன் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தனர்,

அவ்வேளை போட்டிகளில் கலந்து கொண்ட மாணவிகளை நோக்கி கூழ்முட்டைகள் வீசப்பட்டன. கூச்சல், கேலிகள் செய்யப்பட்டன.

இதில் விசேடம் என்னவென்றால் மைதானத்தில் கலாட்டாச் செய்தவர்கள் பெரும்பான்மை இன மாணவர்கள் அல்ல...... சாகோதர தமிழ் மாணவர்களதான் இவர்கள் அருகிலுள்ள இந்துக் கல்லூரி ஒன்றின் 'மாணவர்' களாம்.

தலைநகரிலுள்ள நமது சமூகத்தினர் சற்று 'பாசத்துடன்' நடந்து கொள்ள வேண்டிய காலம் இது.

★ கிறிசன்

## திருக்கேதீஸ்வர மஹோற்சவம் இன்று ஆரம்பமாகிறது

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகின்றது. யாழ்ப்பாணத்தில் தை பிறந்தால் திருவிழாக் காலம் ஆரம்பமாகி விடும் என்று சொல்வார்கள். கிராமங்கள் தோறும் இருக்கின்ற சிறிய, பெரிய கோவில்களிலெல்லாம் புரட்டாதி மாதத்திற்கிடையில் திருவிழா நடந்துமுடிந்துவிடும். ஒவ்வொரு கிராமத்திலும் திருவிழா நடக்கின்ற காலத்தில் அக்கிராம மக்கள் பய பக்தியாகவும், புத்துணர்வுடனும் காணப்படுவார்கள். கிராமங்களே ஒரு புதுப் பொலிவுடன் காணப்படும்.

திருக்கேதீஸ்வரம் ஒரு கிராமத்திற்குரியதன்று. இந்தியா, இலங்கை வாழ் சைவ மக்கள் அனைவருக்கும் பொதுவான ஆலயமாகும். திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணியில் சைவ மக்கள் அனைவரினதும் பணம் சிறு தொகையோ, பெருந் தொகையோ சேர்த்திருக்கின்றது எனக் கூறுவது மிகையாகாது.

நமது நாட்டில் இப்பொழுது நிலைமை சீர்திருந்தி இருப்பதால் சைவ மக்கள் இம்முறை திருவிழாவிற்கு அதிக எண்ணிக்கையில் சமுகமளிப்பார்கள். கேதுவிற்குத் தனிக் கோவில் திருக்கேதீஸ்வரத்தில் மட்டுந்தானிருக்கிறது. கேது ஞானகாரகன், கேதுவை வழிபடுபவர்களுக்கு விஷபயம் நீங்குவதோடு ஞானமும் உண்டாகும்.

திருவிழா பத்து நாளும் தரிசிக்க முடியாதவர்கள், கொடியேற்றத் திருவிழா இன்று, பிட்சாடனார் உற்சவம் 2—ம் திகதி, திருக்கல்யாணம் தண்டிகை உற்சவம் 3—ம் திகதி, பக்தோற்சவம் 4—ம்திகதி. தேர் 5—ம் திகதி, தீர்த்தம் 6—ம் திகதி, மௌன உற்சவம் 7—ம் திகதி, முதலிய உற்சவங்களில் ஒன்றையோ பலவற்றையோ தரிசிக்கலாம் எனத் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை முகாமைக்குழு அறிவித்துள்ளது.

எவ்வளவு அடியார்கள் வந்தாலும் மடாலயங்களில் தங்குமிட வசதியும், அன்னதானமும் நடைபெறும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் தேன்பொந்து என்று கூறப்பட்ட திருக்கேதீஸ்வர நாதருடைய அருள்துளியைப் பருகிச் செல்வீர்களாக.

''தொண்டர் நாள்தோறும் துதி செய்ய அருள் செய் கேதீச்சரமதுவே''

## திறந்த பல்கலைக்கழக அனுமதி தகுதிகாண் பரீட்சை

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தால் விநியோகிக்கப்பட்டு வரும் கற்கை நெறி விண்ணப்பங்கள் அனுப்பியவர்களுக்கான தகுதிகாண் பரீட்சை எதிர் வரும் 17—ம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை விஞ்ஞான மாணிப்பட்டப் படிப்பிற்கும், தொழில் நுட்ப இயந்திரவியல் பட்ட பயிற்சிக்கும் மட்டுமே நடாத்தப்படவுள்ளது.

இப் பரீட்சை யாழ். தொழில் நுட்பக் கல்லூரியிலும், யாழ். பல்கலைக்கழகத்திலும் இடம் பெறவுள்ளது.

(ப.7)

## கோரிக்கை

மீசாலை வடக்கு இராமாவில் முருகமூர்த்தி ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கு நிதி உதவியும் பொருள் உதவியும் வழங்குமாறு தேர்த்திருப்பணிச் சபையினர் பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ப.3)

## அலங்கார உற்சவம் இன்று ஆரம்பம்

ஊரெழு சக்திபுரம் சிவபூரணி காளியம்மன் கோயில் அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்குக் கொடியேற்றும் வைபவத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும்.

7—ம் திகதி, 11—ம் திருவிழாவன்று காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று அடியார்களுக்குப் பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். மாலை வழக்கம் போன்று பூசைகள் இடம் பெற்று அம்பாள் சப்பறத்தில் எழுந்தருளும் காட்சி இடம்பெறும்.

வைகாசிப் பூரணைத் தினமாகிய 12—ம் நாள் 8—ம் திகதியன்று விஷேட நிகழ்ச்சிகளுடன் திருவிழா நிறைவு பெறும். தினமும் திருவிழாக்கள் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8.30 மணிக்கு முடிவடையும்.

திருவிழாக் கிரிகைகள் யாவும் ஆலயத் திருவிழாக் குரு சிவஞானபாஸ்கரன் சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். திருவிழா ஏற்பாடுகளை ஆலயத் திருப்பணிச் சபைமேற்கொண்டு வருகிறது.

## வானொலியில் இன்று

திங்கள் 28-05-90

காலை

| | |
|---|---|
| 5.00 | நாதாஞ்சலி |
| 5.05 | தோத்திரமாலை—சிவபுராணம் |
| 5.30 | பாமாலை—திருவாசகம் |
| 8.00 | வாத்திய விருந்து |
| 8.15 | மெல்லிசைப் பாடல்கள் |

பகல்

| | |
|---|---|
| 10.00 | இசையமுதம் |
| 10.30 | வீணை—துரைசாமி ஐயங்கார் |
| 11.00 | இசைக்கச்சேரி—எம். எல். வசந்த குமாரி |

மாலை

| | |
|---|---|
| 6.15 | பக்திநெறி |
| 6.30 | விஞ்ஞானதீபம் |
| 7.00 | நாட்டுக் கூத்து |
| 7.30 | அங்கும் இங்கும்—கே,பி.சோமசுந்தரம் |

இரவு

| | |
|---|---|
| 9.30 | பேச்சு |
| 9.45 | அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு—மென்டலின்—யூ.ஸ்ரீநிவாசன் |
| 10.45 | குரல் வகை |

# விளையாட்டுச் செய்திகள்

## கூடைப் பந்தாட்டம்

யாழ். சென்றலைஸ் அணிக்கும் கிறின்பீல்ட் விளையாட்டு கழக அணிக்குமிடையேயான கூடைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் கிறின்பீல்ட் அணி 24-22 புள்ளிகளால் வெற்றி யீட்டியுள்ளது.

இப்போட்டிக்கு ரீ. கணேஸ் விக்ணேஸ்வர லிங்கம் மத்தியஸ்தம் வகித்தனர். இப் போட்டியை. எம். சி'ஏ நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இப்போட்டி யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

(மட்டுவில்)

சர்வதேச எழுத்தறிவு ஆண்டினை முன்னிட்டு அறவழிப் போராட்டக் குழுவின் விளையாட்டு அபிவிருத்திச் சபை யாழ். மாவட்ட ரீதியான கரபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது.

இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்ரும் யூன்மாதம் 15ந் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அறவழிப் போராட்டக் குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ப—4

## 50 ஓவர் கிரிக்கெட் போட்டி

(விளையாட்டுத்துறைநிருபர்)

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக்கிண்ணத்திற்கான 50 ஓவர்கட்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டியை யூன் மாதக் கடைசியில் நடத்த தீர்மானித்துள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள், சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். (16)

## ஜூன் 3ல் பரந்தனில் தடகள போட்டி

(விளையாட்டுத்துறை நிருபர்)

கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான தடகள போட்டி எதிர்வரும் யூன் 3—ம் திகதி பி. ப. 2 மணி தொடக்கம், கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. சொ. அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில், பரந்தன் பயிற்சி நிலய மைதானத்தில் நடைபெறும்,

இவ்வைபவத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வன்னிப் பிராந்திய விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர்திரு.ஆர்.சந்திரன், மாவட்டஅரசியல்பொறுப்பாளர் திரு. கோபி, கிளி. மாவட்ட மகளிர் முன்னணி பொறுப்பாளர் செல்வி ரீ. பிரபா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (16)

## பறாளாய்'முதலிடம்பெற்றது

(சித்தன்கேணி)

செல்வக்காராளன் ரவீந்திரன், சிதம்பரப்பிள்ளை முரளீதரன் ஆகியோரது ஞாபகார்த்தமாக சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பெற்ற மென்பந்துக் கிரிக்கட் போட்டியில் பறாளாய் விளையாட்டுக்கழகம் முதற்பரிசுக்கான வெற்றிக்கேடயத்தைப் பெற்றுக் கொண்டது.

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். சுந்தரம்பிள்ளை தலைமையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ஏழு விளையாட்டிக் கழகங்கள் பங்கு பற்றின.

சுழிபுரம் மத்தி கிராம சேவை அலுவலர் திரு. மு. தர்மதாசன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறந்த ஆட்டக்காரராக இறுதிப்போட்டியில் திரு. மு. தாரகன் திகழ்ந்தார். சுற்றுப்போட்டித் தொடரில் சிறந்த ஆட்டக்காரர்களாக திரு. கி. கண்ணனும், திரு. மா. குகதாசும் திகழ்ந்தனர். (12)

## கீறீன் பீல்ட் சாம்பியன்

(விளையாட்டுத்துறை நிருபர்)

யாழ்.வை.எம்.சீ.ஏ அதன் நூறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடாத்திவரும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப்போட்டிகளின் ஓர் அங்கமாக இடம் பெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 18-ம் திகதி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இப்போட்டியில் கீறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம், அதனை எதிர்த்து ஆடிய சென்றலைட் விளையாட்டுக்கழக அணியைக் கடும் போட்டியின் பின் 24:22 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சாம்பியன் ஆனது.

கீறீன் பீல்ட அணி வீரர்கள் H.D.தம்பு, P.ரகுலன் ஆகியோர் பாராட்டத்தக்க விதத்தில் ஆடி முறையே 10:6 புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

மத்தியஸ்தர்களாக விக்கினேஸ்வரலிங்கம், ரொனி கணேசன் ஆகியோர் கடமை ஆற்றினார்கள்.

இப்போட்டிக்கு முன்னோடியாக நடைபெற்ற அரை இறுதிப் போட்டிகளில் சென்றலைட் விளையாட்டுக் கழகம் ஊர்காவற்றைவிளையாட்டுக்கழகத்தை 31:21 புள்ளிகள்கணக்கிலும், கீறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை 34:26 புள்ளிகள் கணக்கிலும் வென்று இறுதி ஆட்டத்தில் ஆடத் தகைமை பெற்றன. (16

## முரசொலிக்கு வந்த கடிதம்

### இருமருங்கிலும் இப்படி என்றால் பாதகம் அன்றோ

ஆசிரியர்
முரசொலி

யாழ் கஸ்துரியார் வீதியின் இருமருங்கிலும், முக்கியமாக கல்யாணி கிறீம்ஹவுஸ் அமைந்திருக்கும் வீதியில் நிறுத்தப்பட்டிருக்கும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பவற்றால் போக்குவரத்து மிகவும் சிரமத்தை ஏற்படுத்துகின்றது.

இருமருங்கிலும் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களைஒரு பக்கமாகவோ அல்லது அதற்கு வேறு ஓர் இடத்தை ஒதுக்கியோ நிறுத்தினால் பாதசாரிகளும் வாகனத்தில் செல்வோரும் சிரமமின்றி செல்லக் கூடியதாக இருக்கும்.

இந்தச் சிரமநிலை போதாது என்று அந்த சூழ் நிலையில் வீதியின் நடுவே இருந்து பிச்சை எடுப்போர் தொல்லையும் அதிகமாகிவருகின்றது.

வாகனங்களுக்கும் நடைபயணிகளுக்கும் சிரமம் ஏற்படுத்தும் வகையில் சிறு குழந்தைகளுடன் வீதியில் பிச்சை எடுக்கும் இவர்களுக்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதோடு,வீதியின் வாகன நிறுத்தங்களை கவனத்தில் எடுக்கும் படியும் செய்தால் என்ன?

யாழ்ப்பாணம் — நலன் விரும்பி

### மின்சாரசபை சீர்திருந்துமா?

ஆசிரியர்
முரசொலி

பருத்தித்துறை நகரசபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட கந்த உடையார் ஒழுங்கையின் மின்சார சேவையின் ஒரு பகுதி கடந்த இரண்டு வாரங்களாக அடிக்கடி தடைப்பட்டு வருகின்றது.

குறிப்பிட்ட மாலை 6.15 மணிக்கும் 7.30 மணிக்கும் இடையில் தினமும் மின்சாரம் தடைப்படுவது வழக்கமாகி விட்டது. குறிப்பிட்ட ஒரு பகுதி மின்சாரம் மட்டுமே இப்படித்தடைப்படுகின்றது. இதுபற்றிச் செயலாளருக்கு பதிவுத் தபால்மூலம் அறிவித்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. மின்சார வரியையும் செலுத்தி மேலதிகமாக எரிபொருள் செலவும் செய்ய முடியாதுள்ளது. மேலதிகாரிகள் இதுபற்றிக் கவனமெடுத்து மேற்படி ஒழுங்கையின் மின்சாரசேவை ஒழுங்காகக் கிடைக்க வழி செய்வார்களா?

கந்த உடையார் ஒழுங்கை,
புலோலி மேற்கு.
பருத்தித்துறை — வ. மார்க்கண்டு

### தென்மராட்சி 'றிபன்' சர்வதேச கண்காட்சியில்

தென்மராட்சியில் தயாரிக்கப்பட்ட 'றிபன்' சர்வதேச 'றிபன்' கண்காட்சியில் இடம் பெறவுள்ளன.

இப் பெருமையை அறவழி பணிமனைப் பெண் தொண்டர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

சமாதானத்தை வலியுறுத்தும் அழகிய 'கண்கவர்' றிபன்கள் இவர்களால் தயாரிக்கப்பட்டு ஜெனீவா, நியூயோர்க் முதலான இடங்களில் நடைபெறும் சர்வதேச ,றிபன் கண்காட்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன (04)

### கூட்டுறவுத்துறை ஊழியருக்கும் ஒய்வூதியம் வழங்கப்படும்

கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டம் பற்றி அரசு ஆராய்ந்துவருகின்றது.

இலங்கையில் கூட்டுறவுத் துறையில் இருக்கும் 33 சதவீத ஊழியர்களும் இவ் உத்தேச ஒய்வூதியத் திட்டத்தினால் நன்மை பெறுவார் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புனரமைப்பு பணிக்கென "நொராட்" நிறுவனம் உதவி

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையின் புனரமைப்பு வேலைகளுக்கென ''நொராட்' ஸ்தாபனம் 5 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது.

கடந்த பல வருடங்களாக இயங்காதிருக்கும் ''லிப்ற்'' திருத்தவேலைகளுக்கும் சமையல் அறை சாதனங்களை கொள்வனவு செய்வதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (05)

பளை ப. நோ. கூ. சங்க ஊழியரும்

### கூடுதல் வாழ்க்கைப் படி பெறுவதற்கு ஏற்பாடு

1990 ஜனவரி முதல் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அதிகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 200 பளை பல நோக்குக்கூட்டுறவுச்சங்கஊழியர்களுக்கு வழங்கப்பட்டது.

இம்மாதச் சம்பளத்துடன் நிலுவைப் பணமும் வழங்கப்படல் வேண்டுமென சங்கப் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தலைவர் ஏ. பீ ஜோர்ஜ் தெரிவித்தார். (ப.3)

கல்வயல் நிகழ்ச்சியில் ராகுலன்

# எமக்குப் பெரிது உயிரல்ல இலட்சியமே; தளரோம்

இலங்கை அரசிற்கும் எமக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையை இலங்கை அரசு உதாசீனம் செய்து எமது பலத்தைக் குறைத்து மதித்து எம்மீது இராணுவ அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விடுமானால் எம் தலைவர் வழி நடாத்தலில் வந்த போராளிகளாகிய நாம் எமது உயிரையெல்லாம் துச்சமென மதித்துப் போராடி வெகு விரைவில் தமிழீழத்தை வென்றெடுப்போம்.

கடந்த கால வரலாற்றைப் பார்த்தால் உங்களுக்கு புரியும் நெல்லியடி இராணுவ முகாமை தாக்கச் செல்லும் போது மில்லர் கூறினான், 'என் தமிழீழ மக்களுக்காக என் உயிரைத்தியாகம் செய்கிறேன்.' என்று இதுபோன்ற நிலைப்பாட்டில்தான் எம் தலைவர் வழிநடத்தலில் வந்த ஒவ்வொரு போராளியும் செயற்படுகிறான்.

இவ்வாறு கல்வயலில் நடைபெற்ற கப்டன் நகுலலின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து பேசுகையில் கொடிகாமப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ராகுலன் கூறினார்.

சாவகச்சேரி நகரப்பொறுப்பாளர் திரு. கோபாலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ராகுலன் தொடர்ந்து பேசுகையில் கடந்த 18 வருடங்களாக நாம் எமது போராட்டத்தை நடாத்தி வருகின்றோம் இலங்கை அரசு அமெரிக்கா ரஷ்யா போன்ற பல வல்லரசுகளின் ஆயுதங்களைக் கொண்டு போராடியபோதும் நாம் அவர்களை முன்னேறமுடியாதபடி தடுத்து வைத்திருந்தோம்

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தபோது புலிகளை அழித்துத் தாம் ஆட்சியை நடாத்தலாம் என நினைத்து வந்தது ஆனால் நடந்தது அதற்கு எதிர்மாறு எமது தலைவரின் வழிநடாத்தலில் வந்த போராளிகள் அவர்களுக்கு பலத்த இழப்புகளை ஏற்படுத்தினர். இழப்புகளை ஈடுகொள்ள முடியாத இந்தியா இராணுவம் நாளடைவில் பின்வாங்கியது.

கப்டன் நகுலன் நினைவாக 22 ஆயிரம் ரூபா செலவில் ஆழமான குழாய்க்கிணறு அமைக்கப்பட்டு நன்னீரும் பெறப்பட்டது. இதை நகுலனின் தாயும், தந்தையும் மங்கள விளக்கேற்றி வீர வேங்கை ஸ்ராரின் தகப்பனார் திரு.க.வாரித்தம்பி மக்களின் பாவனைக்காகத் திறந்து வைத்தார்,

இவ் வைபவத்தில் சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா பேசுகையில் இன்று ஒவ்வொரு வீரவேங்கைக்காகவும், சிலையும், படமும் ஸ்தூபியும் கட்டி நினைவாஞ்சலியைச் செலுத்துகிறார்கள். ஆனால் இன்று இங்கு நிகழ்வது மிகவும் மாறுபட்ட ஒரு செயற்பாடு.

இக்குழாய்க்கிணற்றை நகுலனின் நினைவாக அமைத்ததினால் இந்தக் கல்வயல் பிரதேசத்தில் இருந்த குடிநீர்ப்பிரச்சனை தீர்த்துள்ளது-

இதன்மூலம் இங்குள்ள மக்கள் ஒவ்வொருவரும் நகுலனைத் தினமும் நினைத்துக் கொள்வார்கள். இது போன்றே ஏனைய வீர வேங்கைகளையும் நினைவு கூரும் முகமாக மக்களுக்குப் பயன் படக் கூடிய வகையில் சன சமூக நிலையமாகவோ, அல்லது ஒரு தொழிற்சாலையாகவோ அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகளையும், பொதுமக்களையும் கேட்டுக் கொள்கிறேன். கடந்த காலங்களில் இறந்த வீர வேங்கைகளும் தங்களுக்காக உயிர் நீக்கவில்லை. எமது தமிழ் மக்களின் விடிவிற்காகவே உயிர் நீத்தார்கள். என்றார் (ப.5)

### அடுத்தமாத ஓய்வூதியம்

அடுத்தமாதத்திற்குரிய ஓய்வூதியம் 5-ம் திகதிக்கு முன்னர் வழங்கப்படுமென தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் தற்போது யாழ் செயலக ஒய்வூதியக் கிளையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### வைத்தியசாலை

(3 பக்கத் தொடர்சி)

பிரசுரிக்கத்தான் விரும்பினோம் இறுதிநேரத்தில் சில பல்கலைக்கழக மாணவர்கள் உருக்கமாக வேண்டிக்கொண்டதற்கு இணங்க படத்தை பிரசுரிக்காமல் விடுகின்றோம்.

இப்படியான தவறுகளை பொது இடங்களில் செய்வதை தவிப்பார்கள் என்று நாம் நம்புகிறோம்.

இது இப்படி இருக்க கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையைப்பற்றி எவரும் அறியாத தகவல்களை கிளிநொச்சி வாசகர்கள் எமக்குத் தந்துள்ளார்கள். அத்தகவல்கள் உண்மையா எனப் பரிசீலனை செய்து வருகிறோம் உண்மை என்று தெரியவரும் பட்சத்தில் அவை வெளியிடப் படும்.

### வீட்டுத் தோட்டச் செய்கை குரும்பசிட்டிக்கு ஜேர்மன் நிதி

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசில் உள்ள'ஓம் திட்டம்' இராணுவ நடவடிக்கை களினால் பல்வேறு வகையில் பாதிக்கப் பட்ட குரும்பசிட்டிக் கிராமத்தில் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்க 17,000 ரூபா வழங்கியுள்ளது.

இப்பகுதியிலுள்ள 25 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வீட்டுத்தோட்டம் அமைத்தல், செய்கை முறைகள், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பன பற்றிய பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினை குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் விவசாயக் குழுவினர் நடைமுறைப்படுத்துகின்றனர்.

## சுவையான செய்திகள்

### நீலமாகும் சிவந்த உதடுகள்

சாதாரணமாகப் பெண்கள் தங்கள் உதடு சிவப்பாக இருப்பதையே விரும்புவார்கள். அவ்வாறே கவிஞர்களும் கதாசிரியர்களும் கொவ்வை இதழ்கள் என்று பெண்களின் சிவந்த உதடுகளை வர்ணிக்கின்றனர்.

ஆனால், நியூசிலாந்து மோரி இனத்துப் பெண்களோ தங்கள் உதடுகள் நீல நிறத்தில் இருப்பதையே கவர்ச்சி என்று நினைக்கின்றார்கள். அதற்காகவே தங்கள் உதடுகளில் பச்சை (நீலம்) குத்திக் கொண்டு அவற்றை நீல நிறமாக மாற்றிக் கொள்கிறார்கள்.

### புதுமைக் கலியாணம்

ராஜஸ்தானைச் சேர்ந்த தபாடா என்ற கிராமத்தில் ஏப்ரல் 27—ந் திகதி அன்று நடந்த ஒரு விசித்திர திருமணத்தில் மணப் பெண்ணின் வயதுமூன்றே மாதம். ஆம் கைக்குழந்தையாகவே அது மணவாளனின் கரம் பிடித்தது. கைக்குழந்தையின் தாயார் ஏந்திவர, மணமகனான சிறுவனின் கையை அவன் தகப்பனார் பிடித்துவர, இந்த சம்பந்தி ஜோடி அக்கினியை வலம் வந்து அக்கினி சாட்சியாக திருமணம் நடந்தேறியது,

### பொலிஸ் சிங்கங்கள்

பொலிஸ் நாய்களைப்பற்றித் தெரியும். பொலிஸ் சிங்கங்கள்? பிரேஸில் நாட்டில் பொதுமக்களின் பாதுகாப்புக்காகப் பழக்கபட்ட பொலிஸ் சிங்கங்களை வளர்த்து நாய்களை வைத்திருப்பது போல பிடித்துக் கொண்டு பொது இடங்களில் பொலிசார் நிற்கிறார்கள்.

பிரேஸில் பகுதிகளில் வழிப்பறிக் கொள்ளை, கொலைகள் அதிகமாகிவிட்டதால் பொலிசார் சிங்கங்களை கொள்ளையரை விரட்டிப் பிடித்துக் குதற விடுகிறார்கள். வெளிநாட்டு உல்லாசப் பயணிகளையே கொள்ளையர்கள் அதிகமாக மடக்குகிறார்கள் என்பதாலுமே இக்கடும் ஏற்பாடாம்.

# ஆதம்பாவா படுகொலைக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

எமது அருமைத் தோழர் ஆதம்பாவா கொலையுண்டு விட்டார். தமிழர் முஸ்லிம் ஒற்றுமையைக் கட்டி எழுப்ப விடுதலைப்புலிகளுக்கு துணை நின்ற இன்னொரு அற்புத மான மனிதர் அழிக்கப்பட்டு விட்டார்.

ஏன் இந்தக் கொலை? இது யாரால் செய்யப்பட்டது? எந்த நோக்கிற்காக செய்யப் பட்டது? இந்தக் கொடூரக் கொலையின் பின்னணியி லுள்ள தீய சக்திகள் யார்? இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கையில் தமிழர்—முஸ்லிம் ஒற்றுமையைச் சீர் குலைக்க நீண்ட காலமாகவே தீய சக்திகள் செயற்பட்டு வந்தன என்பது இன்று பல ரும் அறிந்த உண்மை.

இந்தத் தீய சக்திகள் கிழக் கிலங்கையை ஒரு ரண களமாக்கின. இனவாதத்தைத் தூண்டிவிட்டன. தமிழர் முஸ்லிம் ஒற்றுமைக்கும், ஒரு மைப்பாட்டிற்கும், ஒத்திசை வான வாழ்விற்கும் குரல் கொடுத்துவந்த நல்லெண்ண சீலர்களை நயவஞ்சகமாக கொலைபுரிந்து வந்தன.

சிங்கள இனவாதிகளும், முந்திய இந்திய அரசும், அதன் ஏவல்படைகளும், கைக்கூலிகளும் இதுவரை காலமும் தமிழர் முஸ்லிம் ஒற்றுமையை சீர்குலைக்கச் செய்த சதிகளும், நாசவேலைகளும் அதனால் ஏற் பட்ட பாரதூரமான விளைவுகளும் அனைவரும் அறிந்த விசயம்.

தமிழ்—முஸ்லிம் மக்கள் ஐக்கியப்பட்ட ஒரு தமிழ் பேசும் தாயகம் அமைத்து விடக்கூடாது என்பதில் சிங் கள இனவாதிகள் தீவிர அக்கறை காட்டிவருகின்றார் கள். பூளோக ரீதியில் தமிழ் பேசும் மக்களின் தாயக பூமியை பகளீகரம் செய்து இனமோதலை தூண்டி, தமிழர்—முஸ்லிம் வேற்று மையை வளர்ப்பதே சிங்கள இனவாதிகளின் திட்டமாக இருந்து வருகிறது.

தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்த தேசிய விடுத லைப் போராட்டம் வெற்றி பெறக் கூடாது என்பது முந் திய இந்திய அரசின் நிலைப் பாடு. தமிழர்—முஸ்லிம் களைப் பிரித்து, அவர்களது சுயநிர்ணய உரிமைப் போரை நசுக்கிவிட ராஜீவ் அரசு புரிந்த நாசகாரச் செயல்கள் யாவரும் அறிந்ததே.

முஸ்லிம்களின் இரட்சகர்க ளெனக் கூறி, மதவாத அர சியல் நடத்தி, சயலாபத்திற் காக, சுயவிளம்பரத்திற்காக தமிழ், முஸ்லிம் மக்களை கூறுபோட விளையும் அர சியல் சக்திகளும் இன்று முழு மூச்சாக செயல்பட்டு வரு வதை தமிழீழ மக்கள் நன்கு அறிவார்கள்.

இந்திய இராணுவம் முஸ் லிம் மக்களை மிருகத்தன மாக கொலை செய்து அழித் தது. இவர்கள் மௌனம் சாதித்தார்கள்.

இந்திய இராணுவத்தின் கூலிப் படைகள் அப்பாவி முஸ்லிம்களை அநியாயமாக கொன்று குவித்தது. இவர் கள் மௌனம் சாதித்தார் கள்.

சிங்கள இனவாதப்பூதம் முஸ்லிம்களின் தாய்மண்ணை குடியேற்றம் மூலம் விழுங்கி வருகிறது. இவர்கள் மௌனம் சாதிக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் முஸ்லிம்களின் உரி மைக்காக குரல் கொடுத்தது முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்படும் அட்டூழியங் களை அம்பலப்படுத்தியது. சிங்கள இனாவத சக்திகளுக்கு எதிராக இந்திய ஆக்கிர மிப்பு படைகளுக்கு எதிராக இந்திய கைக்கூலி ஆயுதக் குழுக்களுக்கு எதிராக விடு தலைப் புலிகள் இயக்கம் ஆயுதம் ஏந்திப் போராடியது.

தமிழர் முஸ்லிம்தாயகமாக வட கிழக்குப் பிரதேசம் பாது காக்கப்பட வேண்டும்; தமிழ ரும் முஸ்லிம்களும் ஒரே சக்தி யாக ஒன்றிணைந்து போராட வேண்டும்; முஸ்லிம் மக்களின் கலாசாரதனித்துவம் பேணப் படவேண்டும்; முஸ்லிம் மக்கள் தமது பிரதேசங்களில் சுதந்தி ரமாக, கௌரவத்துடன் பாதுகாப்பாக வாழவேண் டும்; என்ற ரீதியில் மூற்போக் கான கொள்கைத் திட்டங் களை முன்வைத்து விடுத லைப்புலிகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் வேலை செய்யத் தொடங்கினர், முஸ்லிம் மக் கள் மத்தியில் ஆதரவையும் பெற்றனர். முஸ்லிம் தமிழரின் ஒற்றுமையை விரும்பிய முஸ் லிம் முற்போக்காளர் பலர் புலிகளின் அரசியல் அமைப் பில் இணைந்து செயற்படத் தொடங்கினர்.

தமிழர்—முஸ்லிம்களை ஒன் றிணைக்கும் சக்தியாக ஒரு தேசிய விடுதலை சக்தியாக புலிகள் இயக்கம் முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதை பிற்போக்குவாத அரசியல் கட்சிகள் விரும்ப வில்லை. விடுதலைப்புலி போராளிகளையும் ஆதரவா ளர்களையும் கொலை செய்து அழிக்க முற்பட்டார்கள். இந் தப் பின்னணியில்தான் எமது தோழர் ஆதம்பாபாவும் கொலை செய்யப்பட்டார் கள்.

ஆதம் பாவா ஒரு முற் போக்கு சிந்தலனயாளர் ஒரு தன்னலமற்ற தலைவர் முஸ் லிம் மக்களின் நலனை, அவர் களது சுபீட்சத்தை இலட்சி யமாகக் கொண்டு வாழ்ந்த வர். தமிழர்—முஸ்லிம் ஒற்று மைக்காக இடையுறாது பாடு பட்டவர்.

இந்த அற்புதமான தியா கிக்கு எமது கண்ணீர் அஞ்ச

— 8ஆம் பக்கம் பார்க்க

## கேதீச்சரன் பதம்தன்னைச் சூடுமையா!

பல்லவி

கேட்டினைக் கண்டேனோ வாட்டமையா — தொடர்
கேட்டினை ஓட்டும்வழி கேளுமையா — இனியும்
(கேட்)

அனுபல்லவி

சம்பந்தர் அருட்பாட்டில் முன்மொழிந்தார்—எழில்
சுந்தரர் திருப்பாட்டில் வழிமொழிந்தார் —எனினும்
கேட்

சரணம்

கேதீச்சரப் பதிக்கின்றே செல்லுமையா — அருள்.
கேதீச்சரன் என்றொருகால் சொல்லுமையா — திருக்
கேதீச்சரன் புகழென்றும் பாடுமையா — என்றும்
கேதீச்சரன் பதம்தன்னைச் சூடுமையா இன்னும்
(கேட்)

முருகு

திருக்கேதீஸ்வர மகோற்சவம் இன்று ஆரம்ரபமாவதை யொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது).

## இன்று

வண்ணார் பண்ணைத் தாமரை வீதியில் அமைந் துள்ள கோட்டையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் அலங்காரத் திரு விழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிப் பதினொரு நாட்கள் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டுத் தின மும் இரவு 7 மணிக்கு நல் லைக் குருமணியின் பிரதம சீடன் இராமாயணக் கதா திலகம் கந்தர்மடம் பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா பக்கவாத்திய சகிதம் கந்தபுராண விரிவுரை நிகழ்த் துவார்.


**சிறு விளம்பரம்**

**தேவை**

மிக விரைவாக வளர்ந்து வரும் ஸ்தாபனத்திற்கு வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள்தேவை நல்ல சம்பளம் வழங்கப் படும், 29. 05. 90 காலை நேரில் விண்ணப்பிக்கவும் செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ் டம்ஸ், 19/3 கொழும்புத் துறை வீதி, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர் வீதி) சுண்டுக்குளி 05173

**கனடாவிற்கான**
**உடனடிப் பிரயாண ஒழுங்கு**

கனடா செல்வதற்கு 35—45 வயது மதிக்கத்தக்க இரு பெண்களும் 18—25 வயது மதிக்கத்தக்க நான்கு பெண்களும் தேவை. செலவில் அரைப்பங்கை கன டாவில் செலுத்த முடியும். விபரங்களிற்கு 28 - ம், 29ம் திகதிகளில் மட்டும் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**MR. A. Joseph**
754, Hospital Road, Jaffna.
05180

**31-ம் நாள் நினைவஞ்சலியும்**
**அந்தியேட்டிக் கிரியையும்**

வையத்தில் — 9 — 4 — 1929



தெய்வத்துள் — 28 — 4 — 1990

**திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்**

**திதி: 28. 5. 90**

தந்தைக்கு ஓர் ஆலயமே! அன்புச் சுடரொளியே! எங்கள் அனைவரையும் துயரக் கடலில் ஆழ்த்தி விட்டுத் திடீரென இறைவன் அருளை ஆவலுடன் அரவணைத்துக் கொண்டீர்களே. இனியும் உங்கள் ஆத்மா துணை நின்று எங்களை வழிநடத்திச் செல்லும் என்ற நம்பிக்கையில் கண்ணீரால் அஞ்சலி செலுத்து கிறோம்.

சங்குவேலி தெற்கு
மானிப்பாய்

என்றும் உங்கள் பிரிவால்
துயரும்
மணைவி, பிள்ளைகள்
05184

**SPECIAL ENGLISH COURSE**
**விசேட ஆங்கில மொழிப் போதனை**

- பேச - எழுத - வாசிக்க - கிரகிக்க
- பாடசாலை விலகியோர், உயர் கல்வி மாணவர், ஆங்கிலமொழியில் ஆர்வமுடையோர்க்காகிய கற்கைநெறி
- 6 மாத, துரித, விரிவான போதனை
- வாரநாள் வகுப்புகள்.

ஆரம்பம் 1. 6. 1990 -பி. ப. 3 மணி

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

தொடர்பு: நிர்வாகி

**NEW SCIENCE ACADEMY**
OPP. B. M. C. JAFFNA
05181

**கம்பியூட்டர் கல்வி**

★ BASIC LANGUAGE
ஆரம்பம்: 30 - 05 - 90 (திங்கள், புதன், வெள்ளி 1.15. பி. ப.)

★ LOTUS 1,2,3
ஆரம்பம்: 07 - 06 - 90 — 9.00 மு.ப.

★ d. BASE III PLUS
ஆரம்பம்; 07 - 06 - 90 (செவ்வாய், வியாழன் 10.30 மு.ப.)

JOIN WITH US TO STUDY THE LATEST COMPUTER TECHNOLOGY




**UNIKCO COMPUTER CENTRE**
No.5, 2nd Lane, Power House Road,
JAFFNA
05185

### விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி மாநாட்டில் மாத்தயா

# தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது பெண்கள் பங்கு அவசியம்

''ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்குமுக்கியமானது.பெண்கள் முழுமையாகப்பங்களிக்கும் போதுதான் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் முழுமைபெறுகின்றது. தேசிய விடுதலை எனும் பொழுது அதில் பெண்ணினத்தின் சமூக விடுதலையும் இணைபிரியாத அங்கமாக அமைகிறது. எமது தேசிய விடுதலைப் போராட்டமும் பெண் விடுதலையை ஒரு பிரதான குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு.மகேந்திரராசா (மாத்தயா) நேற்று யாழ் நகரிலுள்ள வின்சர் தியேட்டர் மண்டபத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் யாப்பு உருவாக்க மாநாட்டில் உரை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார். மூன்று நாட்களாக தொடர்ந்து நடைபெறவிருக்கும் இம்மாநாட்டிற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னணியின் உப—செயலாளருமான செல்வி. சுந்தரி தலைமைவகித்தார்.

'தமிழீழப் பெண்கள் இன்று விடுதலைப் போராட்ட களத்தில் குதித்திருக்கிறார்கள். மகளிர் படைப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு பெண்கள் ஆயுதம் தரித்து ஆண்களுடன் சரிநிகராகப் போராடும் அளவிற்கு எமது போராட்டத்தில் புரட்சிகரமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது''

''தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பங்கு கொள்வதற்கு இன்று பெருந் தொகையான பெண்கள் முன்வந்துள்ளனர் தேசிய, சமூக, ஒடுக்குமுறையால் எழுந்து எதார்த்தப் புறநிலைகளும், வரலாற்று நிர்ப்பந்தங்களுமே தமிழீழப் பெண் இனத்தை போராட்டப் பாதையில் தள்ளியது எனலாம். எமது தலைவர் திரு. பிரபாகரன் தமிழீழப் பெண்களின் விடுதலைக்கு முக்கியத்துவம் அளித்தார் ஆண்களுக்குசரிநிகராக பெண்களும் ஆயுதமேந்திப் போராடவேண்டும் என்ற புரட்சிகரமான கருத்தை அன்று தொட்டு வலியுறுத்திவந்தார் அவரது புரட்சிகரசிந்தனையின் வடிவமாகவே இன்று எம் மத்தியில் பெண் போராளிகளைக் கொண்ட இராணுவ அரசியல் அமைப்புகள் தோற்றம் கொண்டுள்ளன,'' இவ்வாறு திரு.மகேந்திரராசா எடுத்துரைத்தார்.

யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி பானு வரவேற்புரை நிகழ்த்தினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு உறுப்பினரான செல்வி . கீதா யாப்புவின் அடிப்படைக் கொள்கைகளையும், சட்டவிதிகளையும் அறிமுகம் செய்து விவாதத்தை ஆரம்பித்துவைத்தார்.

யாப்பு உருவாக்க விவாதத்தில் பங்குபற்றிப் பேசிய மகளிர் முன்னணியின் பிரதம இணைப்பாளரான செல்வி. ஜெயா பெண்கள் விடுதலை என்ற போர்வையில் இதுவரை காலமும் இயங்கிவந்த சில மாதர் அமைப்புகளின் போலியான கருத்துக்களையும் தவறான நடைமுறைகளையும். கண்டித்தார் பெண் விடுதலை என்ற புனித இலட்சியத்திற்கு இவர்களது போக்கும் செயலும் களங்கம் ஏற்படுத்திபது என்றும் குற்றம் சாட்டினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரெத்தினம் யோகி அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. டொமினிக், யாழ் மாவட்ட மகளிர் படைப் பிரிவு தளபதி செல்வி ஜெயந்தி ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். சகல மாவட்டங்களிலிருந்தும் மகளிர் முன்னணி பிரதிநிதிகள் பலரும் இம்மாநாட்டில் பங்குபற்றினர்.

இந்த யாப்பு மாநாடு நாளையும்,, மறுதினமும் தொடர்ந்து நடைபெறும்.

## வலி மேற்கில் சீனி விலை குறைந்தபாடாயில்லை

சீனியின் விலை ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்த போதிலும்வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள கடைக்காரர்கள் விலையைக் குறைக்காது பழைய விலையிலேயே சீனியை விற்று வருகின்றார்கள்.

சீனி விலை முன்பு அதிகரிக்கப்பட்ட போது உடனடியாக கூட்டி விற்ற கடைக்காரர்கள் விலை குறைக்கப்படும் போது மட்டும் குறைத்து விற்க மறுப்பது ஏன்? என்று பொது மக்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர்.(13)

## ஜே.வி,பி தலைவர் விபத்தில் மரணம்

அம்பாறை மாவட்ட ஜே. வி. பி தலைவர் எதிர்பாராமல் நடந்த குண்டு வெடிப் பொன்றில் மரணமாகியுள்ளார் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன கையில் வைத்திருந்த குண்டு தவறுதலாக வெடித்ததினால் இவர் ஸதலத்திலேயே கொல்லப்பட்டார்.

## இல்ல விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலய இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்று திங்கட்கிழமை பகல் 1.30மணிக்கு இந்து மகாவித்தியாலய மைதானத்தில் உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு. ம. பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

## வெற்றி

ஷப்றா நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜொலிஸ்டார் ஸ்போட்ஸ் கிளப்பால் நடத்தப்பட்ட 40 ஓவர் கிரிக்கெற் போட்டியில் ஜொணியன்ஸ் அணிஜொலிஸ்ரார்ஸ்போட்ஸ் கிளப்பை முப்பத்திநான்கு ஓட்டங்களால் தோற்கடித்தது

# புலமைப்பரிசில் பரீட்சை பலர் தோற்ற முடியாத நிலை

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தின்படி ஆண்டு 5இல் கல்வி கற்கும் பெரும்பாலான மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கல்வி அமைச்சினால் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றுநிருபத்தின்படி இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 1990 ஆண்டு தைமாதம் 31ம் திகதியன்று பத்து வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் பதினொரு வயதிற்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் ஆண்டு 5இல் தற்போது கல்வி கற்கும் மாணவர்கள் 1986ம் ஆண்டு ஐந்து வயதினைப் பூர்த்தி செய்த பொழுதே பாடசாலைக்கு சேர்ந்தவர்கள் ஆவர்.எனவே இம் மாணவர்கள் தற்போது ஒன்பது வயதிற்கும்பத்து வயதிற்கும் இடைப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

இந்நிலைமைகாரணமாக தற்போது ஆண்டு 5இல் கல்வி கற்கும் பெரும்பாலான மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்ற முடியாது போகும் என பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனவேஇச் சுற்று நிருபத்தினைகல்விஅமைச்சுஉடனடியாகமீள் பரிசீலனைசெய்யவேண்டும் என்று. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (43)

### சுமுகமான ..

வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் ஹமீத் கொண்டு வரும் ஜனாதிபதியின் செய்தியில் சுமுகமான தீர்வுகள் இருக்குமென நம்புவதாக புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

### கூட்டுறவுக்...

சியும் விலை குறைக்கப்படாமல் அந்த கிளையில் பழைய விலைக்கே விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் பல தனியார் கடைகளில் ஒரு கிலோ மா 13. 25 க்கு விலை கூட்டப்படாமல் விற்பனையாகியது.

இந்த சம்பவம் பற்றி இன்று நடைபெற்ற நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வர்த்தகர்களுக்கான கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 6-வது திருத்த...

காலதாமதத்தைத் தவிர்க்கலாம் என சட்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அரசியல் அமைப்புச்சட்டத்தில் உள்ள ஆறாவது திருத்தத்தை நீக்கக்கோரும் நகல் பிரேரணையை ஈழவர் ஜனநாயக முன்னணி தயாரித்துள்ளது.

இந்த நகல் பிரேரணை சம்பந்தமாக சக எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு ஈழவர் ஜனநாயக முன்னணியினர் நாளை 29 ம் திகதி விளக்கமளிப்பர்.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் பாராளுமன்ற கூட்டத் தொடரின் போது இந்த நகல் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

### ஆதம்பாவா...

லியை செலுத்திக்கொள்கிறோம், அவரது உயிர் அழிந்தாலும், அவரது இலட்சியம் என்றும் அழியப்போவதில்லை, இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

### 6வது திருத்தச் சட்ட...

வரை 'தமது கட்சிக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை என்றும் அப்படி அறிவித்தால் தாமும் அதற்கு எம்.பி க்கள் மத்தியில் ஆதரவு திரட்டமுடியும் என்றும் ஈ. பி. ஆர். எல். எப். வைச் சேர்ந்த எம். பி. திரு. கே' பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

### வெளிச்சம் ..

கொண்டு கடற்பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபடுவோர் அனைவரும் தத்தமது கலங்களில் வள்ளம்,கட்டுமரம் சிறுபடகு என்பவற்றில் சூழ் லாம்பு, மின்குமிழ் மூலம் வெளிச்சம் இடுதல் வேண்டும் எனவும் கடலில் வெளிச்சம் இல்லாது தொழிலில் ஈடுபடுதல் அபாயகரமானதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் சம்பந்தப்பட்டவர்களிடம் அபராத தொகை அறவிடப்படும் எனவும் யாழ். வடமராட்சி கடற்றொழில் மாதிரி நிர்வாக ஒன்றியத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட கடற்தொழில் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஞாயிறன்று...

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகப் பகுதியில் உள்ள சகல கடைகளையும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்பட வேண்டும் என்றும், இதனை மீறுவோர் மீது நடவடிக்கை எடுப்பது என்றும் இதற்கு சகலரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் வட்டுக்கோட்டை வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. இ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற சங்க பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (13)

### ஆண்டு...

கெட்டித்தனமுள்ள சில மாணவர்கள் ஆண்டு ஐந்தில் நடைபெறும் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற முடியாது போகும் என்பதனாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரட்டிப்பான வகுப்பேற்றம் செய்வதினால் குறைந்த வயதிலேயே இம்மாணவர்கள் ஆண்டு 5 இனை அடைவதினால் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வயதினை எட்டமுடியாமல் போகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (43)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் சேரர் தம்பு அருளம்பலம்

தோற்றம்: 15 - 7 - 1917 28.5,1990 மறைவு: 28 - 4 - 1990

சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் சடங்குகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் எமக்கு உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று 28. 5. 1990 நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்,

கற்குளி, சாவகச்சேரி.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரபிள்ளைகள்.

05186

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 6ஆம் இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 28-05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது